# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம்(திருத்தம்)

***2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரும் நீதி அமைச்சருமானவரால்*
*2017, நவெம்பர் மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, நவெம்பர் மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***216 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2-PL 010476-475 (2017/11)

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது தொடர்புபட்ட முகவர்களிடையே சிறந்த ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் வர்த்தக மத்தியஸ்த நிலையத்தின் முகாமைச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது முகாமைச் சபையின் தவிசாளரை நியமிப்பதற்கும் எந்தமுறை மூலம் தவிசாளர் பதவியிலிருந்து அகற்றப்பட முடியுமோ அந்த முறையை குறித்துரைப்பதற்கும் என அமைச்சரை இயலச் செய்வதற்குமாகும்.

## இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம்
## (திருத்தம்)

*ச.வ.- ஒ. 29/2017*

### 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில்,-

(அ) "(1) நிலையத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமைத்துவமும்" என்னும் சொற்கள் மற்றும் எண்கள் தொடக்கம் "நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்" வரையான சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(1) நிலையத்தின் அலுவல்களின் நிருவாகமும் முகாமைத்துவமும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்):-

2-PL 010476-475 (2017/10)

(i) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது-

(அ) நீதி என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது சிரேட்ட உதவிச் செயலாளர் பதவி வரிசைக்கு மேற்பட்ட பதவி வரிசையிலுள்ள அவருடைய நியமத்தர்;

(ஆ) திறைசேரிச் செயலாளர் அல்லது திறைசேரிப் பணிப்பாளர் மட்டத் திற்கு மேற்பட்ட மட்டத்திலுள்ள அவருடைய நியமத்தர்;

(ii) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பின் வரும் உறுப்பினர்கள்:-";

(ஆ) பந்தி (உ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;";

(2) அதன் (7) ஆம் உட்பிரிவில் "ஓராம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) இன் கீழ்" என்னும் சொற்களுக் கும் இலக்கத்திற்கும் பதிலாக, "ஓராம் உட்பிரிவின் (ii) ஆம் பந்தியின் உட்பந்திகள் (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) இன் கீழ்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ஓராம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(1) அமைச்சர் சபையின் தவிசாளராக அதன் உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "சபைக்கு முகவரியிட்டெழுதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சருக்கு முகவரியிட்டெழுதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.";

(3) மூன்றாம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(3) அமைச்சரானவர், சபையின் மொத்த உறுப்பாண்மையின் அரைவாசியைவிடக் குறைந்தவர்களினால் ஆதரிக்கப்படும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து தவிசாளரைப் பதவிநீக்கலாம்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.